


தீவிரவாத இயக்கங்களின் வலைப்பின்னல் குறித்துப் பார்ப்பதற்கு முன்னால், தீவிரவாதம் என்று எதனைச் சொல்வது என்பதை முடிவு செய்துவிடவேண்டும். இந்தச் சொல், முதன் முதலில் பிரெஞ்சுப் புரட்சி சமயத்தில், அதாவது 1793-ம் ஆண்டு காலகட்டத்தில் தோன்றியிருக்கிறது. தோன்றியபோது, இது ஒரு கெட்டவார்த்தையாக இல்லை. 'Regime de

laterreur' என்றால் புரட்சியின் காலம் என்றுதான் அர்த்தமாகிறது.

இதிலிருந்துதான் 'டெரர்' என்கிற ஆங்கிலச் சொல் உதித்தது. மன்னராட்சி ஒழியவேண்டும் என்று நினைப்பதே புரட்சிகரமல்லவா. தவிர, நியாயமும் கூட. ஊரை அடித்து உலையில் போட்டு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொழுத்த மன்னர்களை ஒழித்துவிட்டு, மக்களாட்சியைக் கொண்டுவர நினைத்ததைத் தப்பென்று சொல்லிவிடமுடியாது அல்லவா?

ஆனால் எல்லா புரட்சிகளும் ஆரம்பத்தில் நசுக்கப்படுவதுதான் வழக்கம் என்பதற்கேற்ப, இந்த முதல்தலைமுறை பிரெஞ்சுப் புரட்சியாளர்களும் தோல்வியடையவே செய்தார்கள். (நிற்கவைத்துத் தலையைச் சீவும் கில்லட்டின் இயந்திரம், இம்மாதிரி நாற்பதாயிரம் புரட்சியாளர்களின் தலையைச் சீவித்தள்ளியது!)

புரட்சியாளர்கள் கொல்லப்பட்டாலும் அவர்களது துணிச்சலும் தீவிரமும் சரித்திரத்தில் நிலைத்துவிட்டது, 'டெரர்' என்கிற அந்தச் சொல்லைப் போலவே. மிக நல்ல அர்த்தத்தில் வைக்கப்பட்ட அந்தப் பெயரை, அதற்குப் பின்னால் அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யும் அத்தனை பேருக்கும் உரிய பெயராக்கிவிட்டார்கள். ஐரோப்பா முழுதும் எங்கெல்லாம் மன்னராட்சிக்கு எதிராக மக்கள் குரல் கொடுக்கிறார்களோ, அவர்களையெல்லாம் டெரரிஸ்ட் என்று அழைக்கத் தொடங்கினார்கள்.

பிற்பாடு கம்யூனிசம் தோன்றி, பரவி, சித்தாந்த பலத்துடன் புரட்சி ஒரு புதுப்

பரிமாணமெடுத்து சோவியத் ரஷ்யாவில் மையம் கொண்டபோது, கம்யூனிஸ்டுகள் எல்லோரும் தீவிரவாதிகள் என்று, அப்போது ரஷ்யாவை ஆண்டுகொண்டிருந்த ஜார் மன்னர் அறிவித்தார். உலகின் முதல் மக்களாட்சி தேசம் என்கிற பெருமை கொண்ட அமெரிக்கா, இது விஷயத்தில் அப்போது வாய்மூடி இருந்தது. இத்தனைக்கும் அமெரிக்கா அப்போது அத்தனை தீவிர கம்யூனிச எதிர்ப்பு தேசமெல்லாம் இல்லை. சொல்லப்போனால் கம்யூனிசம் அப்போது அமெரிக்கா பக்கம் கப்பல் ஏறி வந்திருக்கவே இல்லை. சும்மாதான் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

எப்படியானாலும் எதேச்சாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள், தீவிரவாதிகள். இதுதான் பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகள் வரைக்குமான நிலைமை.

இதைத்தான் இன்றைய ஹைடெக் தீவிரவாதிகள் தமக்குச் சாதகமான வாதமாக, இன்றுவரை உபயோகப்படுத்தி வருகிறார்கள். எதேச்சாதிகாரத்துக்கு எதிரான போர். ஆதிக்க சக்திகளுக்கு

எதிரான ஆயுதப் போராட்டம். அடக்குமுறைக்கு எதிரான துவந்த யுத்தம். ஆனால் இவர்கள் யோசிக்கத் தவறும் விஷயம், பிரெஞ்சுப் புரட்சியின்போதோ, ரஷ்யப் புரட்சியின்போதோ, புரட்சியின் நோக்கம் மக்களாட்சி என்பதாக மட்டுமே இருந்தது என்பதுதான்! தவிரவும், இந்தப் புரட்சியாளர்கள் முடியாட்சிக்கு எதிராக, அமைதியான வழியில் மட்டுமே போராட்டத்தைத் தொடங்கினார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். போராட்டத்தின் உச்சகட்டக் காட்சிகள் மட்டுமே நேரடி யுத்தமாக இருந்தன. போராட்டத்தில் எந்தப் பொதுச்சொத்தும் சேதமானதில்லை என்பதும், அப்பாவி மக்கள் பலிகடாக்களாக்கப்பட்டதில்லை என்பதும், கொடூரமான கொலைவெறிக் காட்சிகள் தினத்துக்கு ஒன்றாக அரங்கேறியதில்லை என்பதும் இதன் பின்னிணைப்புகள்.

புரட்சி என்ற சொல்லின் அர்த்தமே மாறிவிட்ட காலகட்டத்தில், தீவிரவாதத்தின் பாடு குறித்துச் சொல்லவேண்டாம். அந்தக் காலத்தில் புரட்சியாளர்கள், மக்களின் ஆசியுடன், மக்கள் மத்தியிலிருந்தே தோன்றினார்கள். இன்றைய தீவிரவாதிகள் உருவாகக் காரணமாக, சமூக விஞ்ஞானிகள் முன்வைக்கும் காரணங்களைப் பார்த்தால் மூச்சு முட்டும்.

ஏழைமை. கல்வியின்மை. பசி. இவற்றின் மீது ரகசியமாக ஏற்றப்படும் மதவெறி என்கிற விஷ ஊசி. இதன் விளைவாகப் பீறிடும் கோபத்தை அரசியல் லாபங்களுக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் சாமர்த்தியம். இந்தக் கோபம், எங்கெங்கோ மூலைகளில் எத்தனையோ பல தனிமனிதர்களுக்கு உருவாவதாகவே இருந்தாலும், இதனை ஒன்று சேர்ப்பது பெரிய விஷயமல்ல என்கிறார்கள் உளவியல் வல்லுநர்கள். அந்தக் காரியத்தைத்தான் ஒசாமா பின்லேடன் போன்ற தீவிரவாத மாஸ்டர்கள் திறம்படச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

விவரிக்கவே வேண்டாம். நாளது விய வருஷம் சித்திரை மாதக் கணக்குப்படி, நாற்பத்து மூன்று தீவிரவாத இயக்கங்கள் உலகம் முழுவதும் பீமபுஷ்டியுடன் ஜீவித்துக்கொண்டிருப்பதாக பல தேசத்துப் பாதுகாப்புத் துறைகள் கவலையுடன் கருத்துத் தெரிவிக்கின்றன. இதில் அரை பிளேடு இயக்கங்கள், பிக் பாக்கெட் இயக்கங்கள், மாமூல் வசூல் இயக்கங்கள், கைச்செலவுக்கு கஞ்சா கடத்தும் இயக்கங்கள் ஆகியவை சேராது. ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன், நல்ல ஆள் பலம், ஆயுத பலங்களுடன் திட்டமிட்டு அரசுகளுடன் யுத்தம் புரியும் அமைப்புகளைத்தான் தீவிரவாத இயக்கங்களாகக் கருதவேண்டியிருக்கிறது. அரசுகளுடன் யுத்தம் புரிவதாகச் சொல்வார்களே தவிர, இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது பொதுமக்களாகத்தான் இருப்பார்கள். ஆனால், இயக்கங்களுக்கு அது குறித்தெல்லாம் கிஞ்சித்தும் கவலை கிடையாது. பொதுமக்களும் அரசுகளின் ஓரங்கம்தானே? வரி கட்டுகிறார்களல்லவா? சாகட்டும்.

இரண்டு உலகப்போர்கள் நடந்துமுடிந்து, பெரும்பாலான மேற்கத்திய நாடுகளும் சில கீழை நாடுகளும் நொந்து நூலாகிப் போன காலத்தில்தான், தீவிரவாதம் தன்னுடைய அடுத்த அவதாரத்தை எடுத்தது. பல மன்னராட்சி நாடுகளில் யுத்தத்துக்குப் பிறகு ஜனநாயகம் வந்துவிட்டது. மக்கள் வரிசையில் நின்று ஓட்டுப் போடும் கண்கொள்ளாக் காட்சியைப் பரவலாகப் பார்க்க முடிந்தது. குறிப்பாக, ஐரோப்பாவில். ஜனநாயகத்தின் சௌகரியங்கள் மக்களுக்கு அனுபவபூர்வமாகப் புரிந்துவிட்ட பிறகு, பழைய மகாராஜாக்கள் எல்லோரும் சமர்த்தாக மியூசியத்தில் போய் உட்கார்ந்துவிடவேண்டியதாகிவிட்டது. புரட்சி செய்தவர்கள் எல்லோரும் எங்கெங்கோ செட்டில் ஆகிவிட, புதிய புரட்சியாளர்கள் நான்கு காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திக் களத்தில் இறங்க ஆரம்பித்தார்கள்.

அரசியல் ரீதியிலான அடக்குமுறை. மத ரீதியிலான தாக்குதல்கள். இனக்குழு ரீதியிலான ஒழிப்பு நடவடிக்கைகள். பொருளாதார ரீதியிலான சுரண்டல்கள்.

இது ஒவ்வொன்றுமே மிக விரிவாகப் பார்க்கப்பட வேண்டிய விஷயங்கள். ஏனெனில் நல்லதும் கெட்டதும் கலந்து ஜனநாயகம் கொடுத்த பரிசுகளில் இவை நான்குமே மிக முக்கியமானவை.

இன்றைக்குத் தீவிரவாத இயக்கம் என்று முத்திரை குத்தப்பட்டுள்ள எந்த ஓர் அமைப்பை எடுத்துக்கொண்டாலும், மேற்சொன்ன நான்கு காரணங்களுள் ஒன்றை முன்வைத்துத்தான் அவர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது புரியும்.

தமிழர்களுக்குச் சம உரிமை மறுக்கப்பட்டபோதுதான் இலங்கையில் விடுதலைப் புலிகள் அமைப்பு உருவானது. மத்தியக்கிழக்கு தேசங்களின் எண்ணெய் வளத்தைச் சுரண்டுவதற்காகவே அந்தப் பகுதியில் ஏதாவது காரணம் சொல்லி வந்து கூடாரம் அடித்து உட்கார்ந்து, காலி செய்ய மறுக்கும் அமெரிக்காவை விரட்டி ஒழிப்பது ஒன்றே குறி என்று சொல்லித்தான், அல் காயிதா உருவானது. அயர்லாந்தில் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்காகவே உருவானதுதான் ஐரிஷ் ரிபப்ளிகன் ஆர்மி. தொண்ணூறுகளின் தொடக்கத்தில் (குறிப்பாக 1994-ம் ஆண்டு) உலகையே உலுக்கிய ருவாண்டா இனப் படுகொலைகள் நினைவிருக்கிறதா? 80,000 அப்பாவி மக்கள் இறந்துபோனது சரித்திரத்தின் பழைய பக்கங்களாகிவிட்டது. இதற்குக் காரணமான 'இண்டரம்வெ' (வீஸீமீக்ஷீணீலீணீஷீமீ) இயக்கத்தின் செயல்களை எதனைக்கொண்டு நியாயப்படுத்த முடியும்?

முன்சொன்ன நான்கு விஷயங்கள்தான். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு காரணம். ஒவ்வொரு சித்தாந்தம். கொள்கைகளும் கோட்பாடுகளும் வேறு வேறாக இருந்தாலும் உலகை நிரந்தர அச்சத்தில் இவர்கள் நிறுத்திவைத்திருப்பதை மட்டும் யாருமே மறுக்கமுடியாது.

இவர்களை மொத்தமாக மிக்ஸியில் அடித்து சாறு எடுத்துக் குடித்துப் பார்த்துப் புரிந்துகொள்ளவே முடியாது. ஒவ்வொருவரையும் தனித்தனியே அணுகி உற்றுப்பார்த்தால்தான் என்ன செய்கிறார்கள் என்று புரியும். என்ன செய்கிறார்கள் என்பதைக் காட்டிலும், எப்படிச் செய்கிறார்கள் என்பதில்தான் விசேஷம். வருடம் 1992. மாதம், டிசம்பர். இடம், ஏடன் துறைமுகம். அமெரிக்காவிலிருந்து சோமாலியாவுக்கு ஏராளமான நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு நிறைய கப்பல்கள் போய்க்கொண்டிருந்த சமயம் அது. கப்பலில்

சென்றவை நிவாரணப் பொருள்கள் மட்டுமல்ல, நிறைய ராணுவத்தினரும் கூட.

எதற்குப் போனார்கள் என்பதை விவரிக்கவே தேவையில்லை. சோமாலியப் பஞ்சமும் பசியும் வறட்சியும் புகைப்படங்களில் அமரத்துவம் பெற்றுவிட்டவை. ஆனால், முஸ்லிம் தேசமான சோமாலியா மீது முஸ்லிம் விரோத அமெரிக்காவுக்கு ஏன் அக்கறை பீறிடுகிறது?

இந்தக் கேள்வி அல் காயிதாவுக்கு எழுந்தது. அதாவது, ஒசாமா பின்லேடனுக்கு. அப்போது அவர் இருந்த இடம் சூடானின் தலைநகரான கார்ட்டொம் நகரில். எதற்கு அங்கே போனார், என்ன செய்துகொண்டிருந்தார் என்பதையெல்லாம் பின்னால் பார்க்கத்தான் போகிறோம். இந்தச் சம்பவத்தை விவரிப்பதற்கான காரணம் வேறு.

சூடானில் இருந்த ஒசாமா பின்லேடன், சோமாலியாவுக்குப் போகும் அமெரிக்க ராணுவத்தினரை ஏடனில் வைத்துத் தீர்த்துக்கட்ட ஒரு திட்டம் தீட்டினார். கவனிக்கவும். சூடான் இருப்பது கிழக்கு ஆப்பிரிக்காவில். ஏடன் இருப்பது மத்திய ஆசியாவில். வருவது அமெரிக்கக் கப்பல். போகிற இடம் சோமாலியா.

ஒசாமாவின் திட்டம் என்ன? அமெரிக்க மாலுமிகள் ஏடன் துறைமுகத்தில் இறங்கும்போது, எப்படியும் அங்குள்ள சில நட்சத்திர ஓட்டல்களில்தான் தங்கி இளைப்பாறுவார்கள். அங்கே குண்டு வைத்து அழித்துவிடுவது.

இதையெல்லாம் அவர் ஐந்தாண்டுத் திட்டங்களாகச் சேகரித்துவைத்து யோசித்து முடிவு செய்யவில்லை. இரண்டு மூன்று நாள்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவு இது. அவகாசமே கிடையாது. கப்பல் வரும்போது காரியத்தை முடித்துவிடவேண்டும். எப்படி முடிப்பது? யார் செய்யப்போகிறார்கள்? ஐ.எஸ்.டி. கால் போட்டு ஆள் பிடிக்க முடியாது. தகவல் தெரிவிக்கப்

படவேண்டும். அதுவும் வெளியில் கசியாமல் காரியத்தை கனகச்சிதமாகச் செய்து முடிக்க வேண்டும்.

காரியம் நடக்கத்தான் செய்தது. ஏடனிலேயே இருந்த ஒரு சிறு போராளிக் குழுவைப் பிடித்து, அமெரிக்க மாலுமிகள் முன்பதிவு செய்திருந்த இரண்டு நட்சத்திர ஹோட்டல்களில் குண்டு வைத்து ரிமோட் மூலம் வெடிக்கச் செய்தார்கள்.

அமெரிக்கர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் எப்படியோ அதிர்ஷ்டவசமாகிப்போனது. பெரிய பாதிப்பில்லாமல் தப்பித்துவிட்டார்கள், மாலுமிகள். குறைந்தது நூறு பேரையாவது கொல்லும் என்று ஒசாமா எதிர்பார்த்த அந்தக் குண்டுகள், வெறும் இரண்டு பேரின் உயிரைப் பறித்ததுடன் திருப்தியடைந்துவிட்டது.

தோல்விதான். செலவுதான். வீண் முயற்சிதான். அதற்காக அவர் சும்மா இருக்கவில்லை. வினாடி நேரத்தில் சுதாரித்துக்கொண்டு, சோமாலியாவுக்கு வரும் அமெரிக்க ராணுவத்தினரை, சோமாலிய இளைஞர்களைக் கொண்டே ஓட ஓட விரட ஒரு திட்டம் தீட்டி, உடனடியாக கென்யாவின் தலைநகரான நைரோபியில் ஒரு ஆபீஸ் திறந்து, சோமாலியாவிலிருந்து ஆட்களை அழைத்துவந்து பயிற்சி கொடுக்க ஆரம்பித்துவிட்டார்.

நூறு பேரைக் கொன்றால் போதும் என்று நினைத்தவர், இறுதியில் சோமாலியாவிலிருந்து ஒருத்தர் விடாமல் அத்தனை அமெரிக்க ராணுவ வீரர்களையும் ஓட ஓட விரட்டியடித்த கதையும் பின்னால் விரிவாக வரத்தான் போகிறது.

இந்தச் சம்பவத்தை இங்கே குறிப்பிட்டதற்குக் காரணம் நெட் ஒர்க் பலம். எப்படி முடிந்தது? சூடான் எங்கே, ஏடன் எங்கே, சோமாலியா எங்கே, கென்யா எங்கே? விரல் சொடுக்கினால் எப்படி உடனே உடனே வேலைகள் நடக்கின்றன? எங்கிருந்து கொட்டுகிறது பணம்? யார் உதவுகிறார்கள்? எப்படி ஆள் பிடிக்கிறார்கள்?

அல் காயிதாவுக்கு மட்டுமல்ல, இந்த பலம். அத்தனை இயக்கங்களுக்குமே இருக்கிறது. சில இயக்கங்களுக்கு அல் காயிதாவைக் காட்டிலுமே அசுர பலம் இருக்கிறது.

அல் காயிதாவிலிருந்தே ஆரம்பித்து அனைத்தையும் பார்க்கலாம்.